# இன்று பொதுக்காலம் பத்தொன்பதாம் ஞாயிறு

திருவழிப்பாட்டு ஆண்டு A (10-08-2014)

## திருப்பலி முன்னுரை

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! நிறைவாழ்வை நமக்கு வழங்கி, நல்லதையே நமக்கு அருளும் ஆண்டவரின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம். நம் இறைத் தந்தையின் திருநாமத்தில் நல்வாழ்த்துக்கள் கூறி உங்கள் அனைவரையும்: இன்று பொதுக் காலம் பத்தொன்பதாம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வரவேற்று நிற்கின்றோம்.*

*இன்றைய நாளில் இறைவாக்கினர் எலியாவும், திருத்தூதர் பவுலடியாரும் ஆண்டவராம் இறைவன் உரைப்பதைக் கேட்டு இறைவனின் அழைப்பிற்கு பதில்கொடுத்த விதம் பற்றி நமக்கு எடுத்துக் கூறப்படுகின்றது. அத்தோடு 'துணிவோடிருங்கள் : நான்தான், அஞ்சாதீர்கள்:' என்னும் இயேசுவின் வார்த்தைகள் இறைவன் நம்மோடு எப்போதும் இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றன. இவ்வேளையில் ஆண்டவராம் இறைவன் உரைப்பதைக் கேட்பேன், ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன்: என் நெஞ்சம் காத்திருக்கின்றது: அவரது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றேன் என்னும் வார்த்தைகளை நம்முடைய வாழ்வின் வார்த்தைகளாக்கி அவர் வழியில் செல்ல வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.*

